Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.II, Tindivanam.

**CASE NO.CC.20/2011**

**Prosecution witness – PW – 1**

| | | | |
|---|---|---|---|
| **DATE** | **: 10.10.2024** | | |
| Name | : திரு.சுப்ரமணியன். | Caste | : |
| Father Name | : சம்பந்தம். | Calling | : |
| Village/city | : சென்னை. | Religion | : |
| Taluk | : | Age | : 55 |
| | | time: 2.45 to 3.45 | |

(1, 8, 9, 12, 14, 16 எதிரிகள் இறந்துவிட்டார்கள். 17-ம் எதிரி நீக்கரவு செய்யப்பட்டுள்ளார். மற்ற எதிரிகள் ஆஜர். 3, 5, எதிரிகள் ஆஜரில்லை. அவர்கள் சார்பாக அவரது வழக்கறிஞர் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளார்.

**<u>17-ம் எதிரி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை</u>**

1. நான் தற்பொழுது சென்னையில் கூட்டுரவு சங்க பதிவாளர் அலுவலகத்தில் பணி செய்து வருகிறேன். முதல் விசாரணையில் கூறியுள் சங்கதிகளை குறித்துதான் மற்ற இனங்களிலும் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் ஆமாம். திண்டிவனம் மாவட்ட சரக துணை பதிவாளர் அலுவலகத்தில் நான் எத்தனை வருடம் பணி செய்தேன் என்றால் 3 வருடம் பணி செய்தேன். என்னுடைய கட்டுப்பாட்டில் எத்தனை கூட்டரவு சங்கம் செயல்பட்டது என்றால் 130 சங்கங்கள் செயல்பட்டது. என்னுடைய கட்டுப்பாட்டின் கீழ்தான் பிரம்மதேசம் தொடக்க வேளாண்டை கூட்டரவு சங்கம் செயல்பட்டது என்று சொன்னால் ஆமாம். அந்த சங்கம் எந்த ஆண்டு பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியாக

ஞாபகமில்லை. 100 சதவீத ஆய்வு குழுவை யார் நியமனம் செய்தது என்றால் சென்னையில் வழங்கிய உத்தரவின்படி விழுப்புரம் ஜே.ஆர் உத்தரவு வழங்கினார். அந்த உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. 100 சதவீத ஆய்வுக்குழு முதல்நிலை அறிக்கை கடந்த 17.12.2004 ஆம் வருடம் தாக்கல் செய்யப்பட்டு அது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். என்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் மரக்காணம் ஒன்றித்தில் 14 கூட்டுறவு செயல்பட்டு வந்தது என்றால் ஆமாம். அதில் 4 சொசைட்டியில் குறைபாடு உள்ளதாக தெரிவித்து ஆய்வு செய்யப்பட்டது என்றால் ஆமாம். அந்த 4 சொசைட்டிக்கு விசாரணை அதிகாரியை நான் நியமனம் செய்தேனா என்றால் இல்லை. குற்றவியல் நடைமுறை தொடங்கிய பிரம்மதேசம் கூட்டுறவு வங்கியில் மட்டும் தான் விசாரணை அதிகாரியை நியமித்தேன். நான் மற்ற சொசைட்டிக்கு விசாரணை அதிகாரியை வேண்டுமென்றே நியமிக்கவில்லை என்றால் சரியல்ல. 100 சதவீத ஆய்வுக்குழுவானது விசாரணை செய்து 5 இனத்தில் தான் குறைபாடு உள்ளதாக அறிக்கை என்னிடம் கொடுத்தார்கள் என்றால் சரிதான். அந்த அறிக்கையில் நிலம் இல்லாதவர்களுக்கு கடன் வழங்கப்பட்டதாகவும் பினாமி மூலம் மாற்றப்பட்டது சம்மதமாகவும் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. 100 சதவீத ஆய்வுக்குழுவிடம் நிலம் இல்லாதவர்கள் கடன் வழங்கப்பட்டதாக சொல்லப்படும் நபர்கள் ஆய்வுக்குழுவிற்கு வந்து நிலம் உள்ளதாக கையொப்பம் செய்துள்ளார்கள் என்று சொன்னால் இல்லை. கடன் வாங்கிய நபர்களின் கையொப்பத்தினை பெற்று எங்களிடம் உள்ள ஆவணங்களில் இருந்த கையொப்பத்தையும் சேர்த்து கையொப்ப நிபுனருக்கு அனுப்பவில்லை என்று சொன்னால் ஆமாம். நான் நியமித்த விசாரணை அதிகாரி வழங்கிய அறிக்கைக்கும் 100 சதவீத ஆய்வுக்குழுவின் மூலம் 3 நபர்கள் ஆய்வு செய்து தாக்கல் செய்த அறிக்கைக்கும் இடையே உள்ள வேறுபாடை குறித்து நான் விசாரணை செய்தேனா என்றால் செய்தேன். 100 சதவீத ஆய்வுக்குழு கொடுத்த அறிக்கையின் அடிப்படையில் 17 வது எதிரி தீர்மானம் பிறப்பித்து ஆய்வுக்குழு கொடுத்த

அறிக்கையின பேரில் செயலாளர் மீது தாவா தாக்கல் செய்ய உதவி செயலாளரிடம் கொடுத்தாரா என்றால் கொடுத்தார். அந்த தீர்மானத்தின் மீது நான் மேல் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. குற்றவியல் வழக்கு நிலுவையில் உள்ளதால் எடுக்கவில்லை. 3.1.2005 அன்று விசாரணை அதிகாரியை நான் தான் நியமித்தேன் என்றால் ஆமாம். (அ.சா.ஆ.2) அந்த உத்தரவு பிறப்பித்ததனை நான் பிரம்மதேசம் தொடக்க வேளாண்மை சங்கத்திற்கு தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன். 9.4.2005 அன்று அவர் விசாரணை முடித்து அறிக்கையை என்னிடம் சமர்பித்தாரா என்றால் ஆமாம. (அ.சா.ஆ.3). ஒரு கூட்டுறவு சங்கத்தின் பிரிவு 81(1) ன்படி விசாரணை செய்யவும் 82ன் படி ஆய்வு செய்வதற்கும் அரசால் நியமிக்கப்பட்ட 11 நபர்கள் கொண்ட இஓசி (Extention officer co-operation) மற்றும் கூட்டுறவு சார்பதிவாளர் பண்ணை 3 நபர்கள் சேர்த்து மொத்தம் 14 நபர்கள் இருப்பார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் ஆரோக்கியராஜ்(அ.சா.4) விசாரணை அதிகாரியாக நியமிக்க காரணம் என்னவென்றால் அந்த இடங்கள் காலியாக இருந்ததால் அவரை நியமித்தேன். விசாரணை அதிகாரி அவருடைய அறிக்கையில் 1993 லிருந்து 2004 வரை முறைகேடு நடந்துள்ளதா அறிக்கையில் தெரிவித்துள்ளார் என்று சொன்னால் ஆமாம். மேற்கண்ட வருடங்களில் பணி செய்த நபர்களின் பெயர்களை அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளாரா என்றால் ஆமாம். 1993 லிருந்து 100 சதவீத ஆய்வுக்குழு நியமித்து ஆய்வு செய்யாமல் 2003 மற்றும் 2004 ஆம் வருடம் மட்டும் எதற்காக 100 சதவீத ஆய்வுக்கு எதற்காக நியமிக்கப்பட்டது என்றால் அந்த வருடம் தான் மாநில அளவில் ஆய்வு செய்யக்கோரி மாநில பதிவாளர் உத்தரவு பிறப்பித்தார். எதிரி கருணாநிதி 24.4.2002 முதல் 10.8.2003 வரை விழுப்புரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் முதுநிலை ஆய்வாளர/விற்பணை அலுவலராகவும் பணிபுரிந்தார் என்றால் ஆமாம். ஆனால் அவர் எந்த ஆண்டு பணிபுரிந்தார் என்று ஞாபகமில்லை. அதன்பின்னிட்டு 11.8.2003 முதல் 20.5.2005 வரை திண்டிவனம் சரக துணை பதிவாளர் அலுவலகத்தில் வேளாண்மை சேவை சங்கம் பிரிவு உதவியாளராக பணிபுரிந்தார் என்றால்

ஆமாம். நான் விசாரணை அதிகாரியாக நியமித்த நபர் தக்கல் செய்த அறிக்கையில் மறைக்கப்பட்ட ஆவணத்தை குறித்து நான் 7.2.2005 அன்று பிறப்பித்த உத்தரவு பற்றி எதிரி கருணாநிதிக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரி கருணாநிதிக்கு தெரியப்படுத்தாமலேயே அவருடைய கட்டுப்பாட்டில் இருக்கும் அலுவலக கோப்பினை எடுத்து ஆய்வு செய்து விசாரணை அதிகாரியை நியமித்தேன் என்று சொன்னால் ஆமாம். ஆனால் அந்த ஆவணம் அரசாங்க அலுவலகத்தில் உள்ள ஆவணம் என்பதால் எடுத்து ஆய்வு செய்தேன். 6.1.2005 அன்று ஆரோக்கியராஜ் என்பவர் தாக்கல் செய்த அறிக்கையில் எதிரி ஆவணத்தை களவாடிவிட்டார்(மறைக்கப்பட்ட ஆவணம்) என்று திட்டமிட்டுதான் குறிப்பிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. எதிரி கருணாநிதி 10.3.2003 முதல் 11.2.2005 வரை தனி அலுவலராக நியமிக்கப்பட்டு பணியில் இருந்தார் என்றால் விழுப்புரம் துணை பதிவாளர் நியமித்தார். அந்த காலகட்டத்தில் அவர் கூடுதலாக பிரம்மதேசம் உட்பட 9 சொசைட்டிக்கு பொறுப்பில் இருந்தார் என்று சொன்னால் ஆமாம். ஆனால் எத்தனை சொசைட்டி என்று எண்ணிக்கை தெரியாது. அவ்வாறு பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கும் போது தனித்தனியாக ஒவ்வொரு சொசைட்டிக்கும் நாள்தோறும் சென்று பார்க்க முடியாது என்று சொன்னால் ஆமாம். பிரம்மதேசம் தொடக்க வேளாண்மை சங்கம் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக குழுவால் எந்த ஆண்டில் இருந்து எந்த ஆண்டு வரை நிர்வகிக்கப்பட்டது என்று சொன்னால் 1996 முதல் 2001 வரை. அதன்பின்னிட்டு அந்த குழு கலைக்கப்பட்டது என்று சொன்னால் ஆமாம். அதன்பின்னர் 25.5.2001 முதல் தனி அலுவலரால் பிரம்மதேசம் சொசைட்டி நிர்வகிக்கப்பட்டு வந்தது என்றால் ஆமாம். 25.5.2001 முதல் 10.3.2003 வரை 16 வது எதிரி கருணாமூர்த்தி நிர்வகித்து வந்தார் என்று சொன்னால் ஆமாம். நிர்வாக குழு கலைக்கப்பட்டால் புதிய அங்கத்தினர் அதில் சேர்க்க முடியுமா என்றால் முடியாது. தனி அலுவலர் அரசு அதிகாரி என்று சொன்னால் ஆமாம்.

குறுக்கு விசாரணை தொடச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

//திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண்.2, திண்டிவனம்